**PROCEEDINGS OF PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED MINING PROJECT OF THIRU. N. OBULA REDDY ROUGH STONE QUARRY LOCATED AT SF.NO. 265/1 (PART-4), LEASE OVER AN EXTENT OF 1.46.0 HA LOCATED AT MADHAKONDAPALLI VILLAGE, DENKANIKOTTAI TALUK, KRISHNAGIRI DISTRICT ON 27.09.2023 AT 11.00 AM AT M/S. ANNAMACHARYA KALYANAMANDAPAM, HOSUR TO THALLY MAIN ROAD, MATHAKONDAPALLI VILLAGE, DENKANIKOTTAI TALUK, KRISHNAGIRI DISTRICT – 635 114.**

**Present:**

| | | | |
|---|---|---|---|
| 1 | Thiru. C. Suresh | : | Special District Revenue Officer,<br>(LA – 948 A STRR),<br>National Highways, Hosur.<br>(Representative of the District Collector, Krishnagiri) |
| 2 | Er. R. Venkatesan., M.E., | : | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board, Hosur,<br>Krishnagiri District |
| 3 | Er. V.Deenadayalan., M.E., | : | Assistant Engineer,<br>Tamil Nadu Pollution Control Board, Hosur,<br>Krishnagiri District |
| 4 | Thiru.N.Obula Reddy | : | The Proprietor<br>Thiru. N.Obula Reddy Rough Stone Quarry |
| 5 | Thiru. P.Gopinath | : | EIA Consultant,<br>M/s. Eco Tech Labs Private Limited,<br>Chennai. |
| | Public | : | 31 Nos. (List enclosed as Annexure) |

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District welcomed the Special District Revenue Officer, National Highways, Hosur (Representative of the District Collector, Krishnagiri), Revenue

officials, all the general public and project proponent who have attended the public hearing for the proposed Thiru. N.Obula Reddy Rough Stone Quarry Lease over an Extent of 1.46.00 Ha Located at S.F.No. 265/1 (part-4), Madhakondapalli Village, Denkanikottai Taluk, Krishnagiri District is required to get Environmental Clearance (EC) from the State Environment Impact Assessment Authority of Tamilnadu. He added that the public notice informing the conducting of Public Hearing was published in the Tamil and English dailies, such as, "Dinathanthi" and "Times of India" dated 24.08.2023 and bit notices regarding public hearing was issued to the public of Madhakondapalli Village, Chinnamadhakondapalli Village, and Mathkur with audio announcement through auto vehicle in and around the villages. Further, he informed that the project proponent would make a presentation on the project, after which the public can express their views.

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District also stated that the views, suggestions and queries of the public and reply by the project proponents will be recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu.

Special District Revenue Officer, National Highways, Hosur (Representative of the District Collector, Krishnagiri), has initiated the Public Hearing process. Further, the Special District Revenue Officer, National Highways, Hosur has requested the project proponent to explain about their proposed Rough Stone quarry project through power point presentation and requested the public to obtain necessary clarifications for their doubts.

Thereafter, Thiru. P.Gopinath EIA Consultant, M/s. Eco Tech Labs Private Limited, Chennai of the proposed Rough Stone quarry project has made presentation about the proposed Rough stone quarry project to the public along with Environmental Management Plan. Thereafter, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District has invited the public to express their views and comments about the proposed Rough stone quarry project. The views and suggestions of the public are detailed below:

1. **Thiru. Munireddy, Mathukur Village, Mathagondapalli Panchyat:**

Thiru. Munireddy has said that, there is no problem of this proposed M/s. Obula Reddy rough stone quarry. Water should be sprinkled on the roads during movement of heavy vehicles to avoid environmental pollution and minimum explosives should be used. Our panchayat has developed by the existing quarry. The royalty amount of this quarry is being used for Mathagondapalli village. Further, only Madhukur village is located at near the M/s. Obula Reddy rough stone quarry. Therefore, he requested to utilize royalty amount for the development of Mathukur village.

2. **Thiru. A. Balachandar, Mathukur Village:**

Thiru. A. Balachandar has said that, there is no problem of this proposed M/s. Obula Reddy rough stone quarry. During operation of this quarry, Water should be sprinkled on the roads during movement of heavy vehicle to avoid environmental pollution. Also, he said that in Mathukur village unemploy to the educated youth and job opptornuity will be given to this educated youth of Mathukur village.

3. **Thiru. Vikram, Uliveeranapalli Village:**

Thiru. Vikram has asked that, to develop the green belt around the proposed quarry of M/s. Obula Reddy rough stone quarry. The environment is affected, so as to plant the trees and tree sampling around the quarry.

4. **Thiru. Prakash, Karapalli Village:**

Thiru. Prakash has said that, by planting trees and tree samples around the proposed quarry of M/s. Obula Reddy rough stone quarry, the environment will be protected. While movement of heavy vehicles, additional water should be sprinkled on the roads to control the dust emission. Also, he requested that, help to the construction of temple and schools located at nearby village of the proposed quarry.

**Conclusion:**

Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur informed that the views, suggestions, written complaints and queries of the public and reply by the project proponent are recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu - Chennai.

Further, 5 number of petitions were received on the proposed Thiru. N.Obula Reddy Rough Stone Quarry project during the public hearing meeting. 'The petitions are enclosed herewith'.

Further, it is informed that, no written representation and E-mail petition was received in the O/o. District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Hosur, Krishnagiri District from the public on the proposed Rough Stone quarry project.

List of public attended the public hearing meeting along with photographs, Pen Drive and CD recorded with the entire proceedings of public hearing are enclosed herewith.

03/10/2023

**District Environmental Engineer**
**Tamilnadu Pollution Control Board**
**Hosur**

03/10/23

**Special District Revenue Officer**
**(LA – 948 A STRR)**
**National Highways**
**Hosur**

**District Collector**
**Krishnagiri**

**கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டம், மதகொண்டப்பள்ளி கிராமத்தில், சர்வே. எண். 265/1 (பகுதி/4), உத்தேசிக்கப்பட்டுள்ள திரு.என்.ஓபுலா ரப் ஸ்டோன் குவாரி, 1.46.0 ஹெக்டர் பரப்பளவில் நடத்த சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு 27.09.2023 அன்று ஓசூர் – தளி மெயின் ரோடு, மதகொண்டப்பள்ளி கிராமம், தேன்கனிக்கோட்டை வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அமைந்துள்ள தி/ள். அன்னமாச்சாரியா கல்யாணமண்டபத்தில், காலை 11.00 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கை விபரங்கள்:**

பங்கேற்றோர்:

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு. C. சுரேஷ் | : | தனி மாவட்ட வருவாய் அலுவலர்<br>(நில எடுப்பு – 948A STRR)<br>தேசிய நெடுஞ்சாலை, ஓசூர்.<br>(மாவட்ட ஆட்சித் தலைவர், கிருஷ்ணகிரி அவர்களின் பிரதிநிதி) |
| 2 | Er. R. வெங்கடேசன் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>ஓசூர். |
| 3 | Er.V.தீனதயாளன் | : | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>ஓசூர். |
| 4 | திரு.N.ஓபுலா ரெட்டி, | : | உரிமையாளர்<br>திரு.N.ஓபுலா ரெட்டி ரப் ஸ்டோன் குவாரி |
| 5 | திரு. P. கோபிநாத் | : | சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர்<br>தி/ள்.ஈக்கோ டெக் லேப்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை. |
| | பொதுமக்கள் | : | 31 எண்ணிக்கை (வருகை பதிவேடு இணைக்கப்பட்டுள்ளது) |

திரு.N.ஓபுலா ரெட்டி ரப் ஸ்டோன் குவாரி சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்த தனி மாவட்ட வருவாய் அலுவலர், தேசிய நெடுஞ்சாலை, ஓசூர், பொதுமக்கள் மற்றும் திரு.N.ஓபுலா ரெட்டி ரப் ஸ்டோன் குவாரி உரிமையாளர் அனைவரையும் மாவட்ட

சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விவரம் ஏற்கனவே தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களான முறையே "தினத்தந்தி" மற்றும் "டைம்ஸ் ஆப் இந்தியா" நாளிதழ்களில் 24.08.2023 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். மேலும், மதகொண்டப்பள்ளி, சின்னமதகொண்டப்பள்ளி, மதுக்கூர் ஆகிய கிராமங்களின் சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஒலிப்பெருக்கி மற்றும் துண்டு பிரசுரங்கள் மூலம் பொது அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். இத்திட்டம் தொடர்பாக குவாரியின் திட்ட ஆலோசகர் விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பாக தங்களது கருத்துக்களையும் மற்றும் ஆலோசனைகளை வழங்கலாம் என கூறினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரியின் உரிமையாளர்கள் சார்பாக அவர்களுடைய திட்ட ஆலோசகர் ரப் ஸ்டோன் குவாரி திட்டத்தை பற்றிய விளக்கவுரையை பொதுமக்களுக்கு விளக்குவார் என்றும் அதனை தொடர்ந்து பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள், சந்தேகங்கள், விளக்கங்களை கேட்கலாம் எனவும் இவையனைத்தும் வீடியோகிராபி மற்றும் ஒலிப்பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் குறிப்புகள் தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

தனி மாவட்ட வருவாய் அலுவலர், தேசிய நெடுஞ்சாலை, ஓசூர் அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தொடங்கி வைத்தார். பின்னர் திரு.N.ஓபுலா ரெட்டி ரப் ஸ்டோன் குவாரி திட்டத்தின் உரிமையாளர்களை உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரி தொடர்பான விளக்கவுரையை நிகழ்த்தக் கூறினார்.

திரு.N.ஓபுலா ரெட்டி ரப் ஸ்டோன் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் திரு.P.கோபிநாத், தி/ள்.ஈக்கோ டெக் லேப்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்தோர் அனைவரையும் வரவேற்று ரப் ஸ்டோன் குவாரி திட்டத்தின் செயல்பாடு தொடர்பாகவும் மற்றும் இதன் செயல்பாட்டின் போது மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் காணொளி விளக்கக்காட்சி மூலம் விரிவாக எடுத்துரைத்தார்.

மேற்கூறிய விளக்கவுரைக்கு பிறகு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ வழங்கலாம் என குறிப்பிட்டார். கருத்துக்களை பதிவு செய்யும் முன்பு பொதுமக்கள் தங்கள் பெயர் மற்றும் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை பதிவு செய்யுமாறு தெரிவித்தார்.

அதன்படி, பொதுமக்கள் தங்களுடைய கீழ்க்கண்ட கருத்துக்களை மற்றும் ஆலோசனைகளை தெரிவித்தனர்.

**பொதுமக்கள் கருத்துகேட்பு:**

1. **திரு. முனிரெட்டி, மதுக்கூர் கிராமம், மதகொண்டப்பள்ளி பஞ்சாயத்து :**

திரு. முனிரெட்டி அவர்கள், திரு.N.ஓபுலா ரெட்டி ரப் ஸ்டோன் குவாரி அமைவதினால் எவ்வித பிரச்சனையும் இல்லை. கனரக வாகனங்கள் செல்லும் பொழுது தண்ணீர் தெளித்து சுற்றுச்சூழல் மாசு அடையாதவாறு நடத்தப்பட வேண்டும் மற்றும் குறைந்த அளவில் வெடிகளை பயன்படுத்த வேண்டும் என்றார். குவாரி அமைந்ததால் எங்களுடைய பஞ்சாயத்திற்கு அதிக முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது.

இக்குவாரியின் ராயல்டி தொகையை மதகொண்டப்பள்ளி கிராமத்திற்கு பயன்படுத்தி வருகின்றனர். மேலும், திரு.N.ஓபுலா ரெட்டி ரப் ஸ்டோன் குவாரி அருகில் மதுக்கூர் கிராமம் தான் அமைந்துள்ளது. எனவே, மதுக்கூர் கிராமத்திற்கு ராயல்டி தொகையை பயன்படுத்துமாறு கேட்டுக்கொண்டார்.

**2. திரு.A. பாலசந்தர், மதுக்கூர் கிராமம்::**

திரு. A.பாலசந்தர் அவர்கள், திரு.N.ஓபுலா ரெட்டி ரப் ஸ்டோன் குவாரி அமைவதினால் எவ்வித பிரச்சனையும் இல்லை. மேலும், கனரக வாகனங்கள் செல்லும் பொழுது தண்ணீர் தெளித்து சுற்றுச்சூழல் மாசு அடையாதவாறு குவாரி நடத்தப்பட வேண்டும். மதுக்கூர் கிராமத்தில் படித்த இளைஞர்கள் வேலையில்லாமல் இருக்கின்றனர், அவர்களுக்கு எதாவது வாய்ப்பு கொடுத்தால் நன்றாக இருக்கும் என்று கூறினார்.

**3. திரு. விக்ரம், உளிவீரனப்பள்ளி கிராமம்::**

திரு. விக்ரம் அவர்கள், திரு.N.ஓபுலா ரெட்டி ரப் ஸ்டோன் குவாரியை சுற்றிலும் மரங்கள், செடிகள் நடுமாறு கேட்டுக் கொண்டார். சுற்றுச்சூழல் கொஞ்சம் பாதிக்கப்படுகிறது அதனால் குவாரியை சுற்றிலும் மரங்கள், செடிகள் நடுமாறு கேட்டுக் கொண்டார்.

**4. திரு, பிரகாஷ், காரப்பள்ளி கிராமம்:**

திரு. பிரகாஷ் அவர்கள், திரு.N.ஓபுலா ரெட்டி ரப் ஸ்டோன் குவாரியை சுற்றிலும் மரங்கள், செடிகள் நடுவதால் சுற்றுச் சூழல் பாதுகாக்கப்படும் என்றும் கனரக வாகனங்கள் செல்லும் பொழுது தூசு வராமலிருக்க கூடுதலாக தண்ணீர் விட வேண்டும் என கூறினார். மேலும், குவாரியின் அருகிலுள்ள கிராமத்தில் கோயில் கட்டுவதற்கும், பள்ளிகளுக்கும் உதவுமாறு கேட்டுக் கொண்டார்.

முடிவுரை:

இறுதியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் கூறிய கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு மற்றும் எழுத்து பூர்வமான மனுக்கள் பெறப்பட்டு அவை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் சென்னைக்கு அனுப்பப்படும் என்பதனை தெரிவித்துக் கொண்டு இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் முடிவுபெற்றதாக தெரிவித்தார்.

மேலும், உத்தேசிக்கப்பட்டுள்ள திரு.N.ஓபுலா ரெட்டி ரப் ஸ்டோன் குவாரி திட்டம் தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின்போது பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட 5 எண்ணிக்கையிலான மனுக்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மேலும், திரு.N.ஓபுலா ரெட்டி ரப் ஸ்டோன் குவாரி உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரி திட்டம் அமைப்பது தொடர்பாக பொதுமக்களிடம் எழுத்து மூலமாகவோ, மின்னஞ்சல் மூலமாகவோ மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர், அலுவலகத்தில் எவ்வித மனுக்களும் பெறப்படவில்லை.

மேற்கூறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொலி குறுந்தகடு, ஒலி பதிவு மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகோல், ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

03/10/2023

| | | |
|---|---|---|
| மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்<br>ஓசூர் | தனி மாவட்ட வருவாய் அலுவலர்<br>(நில எடுப்பு – 948A STRR)<br>தேசிய நெடுஞ்சாலை<br>ஓசூர் | மாவட்ட ஆட்சியர்<br>கிருஷ்ணகிரி |

03/10/23